தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 97ஆவது வாரியக் கூட்டம் தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகை 5ஆவது தளத்திலுள்ள கூட்டரங்கில், அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

சிறுதுறைமுகங்கள் மூலம் 12 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளது!

தனியார் முதலீட்டு துறைமுகங்கள் அமைக்க சாத்தியமான மாநிலம் தமிழ்நாடு!

அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

சென்னை, செப். 30 -

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின், 97ஆவது வாரியக் கூட்டத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்து உரையாற்றுகையில், தனியார் முதலீட்டு துறைமுகங்கள் அமைக்க சாத்தியமான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 97ஆவது வாரியக் கூட்டம் இன்று (29.9.2023 தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகை 5வது தளத்திலுள்ள கூட்ட ரங்கில், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 97ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்பித்த பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் / தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தலைவர் அவர்களையும், அனைத்து உறுப்பினர்களையும், துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வரவேற்று, உரை யாற்றினார்.

97ஆவது கடல்சார் வாரியக் கூட்டத்தை அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்து, உரையாற்றுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப, 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் பொருளாதார வளர்ச்சி அடைய கடல்சார் வாரியத்தின் பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் மாநிலத்திற்கு மிகப்பெரும் வருவாய் கிடைக்க வேண்டும். மேலும், இதன் மூலம் தமிழ்நாட்டின் GDP உயர்வதுடன் கூடுதலாக வேலை வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும். சிறு துறைமுகங்கள் மூலம் வணிகம் மற்றும் சுற்றுலா வளர்ச்சிப் பெற வழிவகை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால், தமிழ்நாடு தொழில் முனைவோருக்கான முன்னோடி மாநிலமாக உள்ளது என்றும், இதன் அடிப்படையில் தனியார் முதலீட்டு துறைமுகங்கள் அமைப்பதற்கு மிகவும் சாத்தியமான மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என்று தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் 1069 கிலோ மீட்டர் நீளக்கடற்கரை பகுதியில் சாத்தியமான இடங்களில் சுற்றுப் புறச்சூழல் மற்றும் மீன்பிடி வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படாமல் பல்வேறு சிறு துறைமுகங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது என்று தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் சாகர் மாலா திட்டத்தின்கீழ், கடலூர் துறைமுகத்தை மேம்படுத்தி 37 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போதுதான் அதை இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. விவேகானந்தர் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலையை இணைக்கும் கண்ணாடி பாலம், பொது மக்களின் பேராதரவை பெற்றுள்ளது. இதுவரை பல இலட்சம் சுற்றுலா பயணிகள் பார்வையிட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் - தலைமன்னார் பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க கருத்துருக்கள், ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு, நிதியுதவி கோரப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் கூறினார்கள்.

2024-2025 ஆம் ஆண்டில், தமிழ்நாடு கடல்சார் வாரியக் கட்டுப்பாட்டிலுள்ள சிறுதுறைமுகங்களில், 12 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு, அனைத்து உறுப்பினர்களும் முழு ஒத்துழைப்பை நல்குமாறு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் அவர்களின் தொடக்கவுரையை தொடர்ந்து வாரியக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு பொருள் தொடர்பாக, விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் டி.என்.வெங்கடேசன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா. செல்வராஜ், போக்குவரத்து துறை முதன்மைச் செயலாளர் சுஞ்சோங்கம் ஜடக் சிரு பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, தொழில் துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகத் துறையின் முதன்மைச் செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு கழகத்தின் (SIPCOT) மேலாண்மை இயக்குநர் டாக்டர் K.செந்தில்ராஜ், நிதித்துறை இணைச் செயலாளர் ராஜகோபால் சுங்கரா , கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் எம்.அன்பரசன், தமிழ்நாடு & புதுச்சேரி கடற்படை உயர் அதிகாரி கமாண்டர் சவராட் மாஹோன், கடலோர காவல் டி.ஐ.ஜி. பி. முருகன் (TN Coast Guard), சுங்கத்துறை கண்காணிப்பாளர் சி.ஆர்.சுப்பராவ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் – ரூ.16 லட்சத்தில்

சொட்டுநீர் பாசன இயந்திரங்கள் - காய்கறி விற்பனை வண்டிகள்!

பயனாளிகளுக்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி , செப். 30 -

விழுப்புரம் மாவட்டம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில்மேல்மலையனூர் வட்டாரத்தில் சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தோட்டக்கலை துறை சார்பில் பயனாளிகளுக்கு காய்கனி விற்பனை வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி, விவசாயிகளுக்கு பாசன இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் பிரபு சங்கர் முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பிரவீன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தில் 7நபர்களுக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலான காய்கனி விற்பனை வண்டிகளையும்

14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 நபர்களுக்கு சொட்டு நீர் பாசன இயந்திரத்தினையும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் காய்கறி விதைகள்மற்றும் வேளாண் இடுபொருட்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், காந்தி சுப்பிரமணியன், நிர்வாகிகள் எஸ்.பி. சம்பத், பெருமாள், குமார், தோப்பு சம்பத், மணிகண்டன், சக்தி வாசன், அருண், ஆறுமுகம்,வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலக பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தோட்டக்கலைத்துறை உதவி அலுவலர் சந்தியா அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழுப்புரம் த.மு.மு.க இஸ்லாமிய பிரச்சார பேரவை சார்பில் அமைதியை நோக்கி வாழ்வியல் கண்காட்சியை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ., த.மு.மு.க மாநில தலைவர் ஜவாஹிருல்லா ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், விழுப்புரம் முஸ்லிம் லீக் கட்சி மாவட்ட செயலாளர் அமீர் அப்பாஸ், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு. விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் உடனிருந்தனர்.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர், அமைசசர் இரா.இராஜேந்திரன் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, மு.கார்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக்கண்ணன், மேயர் ஆ.ராமச்சந்திரன் தொகுதி பொறுப்பாளர்கள் பி.ஏ.ஆர்.இளங்கோவன், இ.ஜி.சுகவனம், டாக்டர். விவேக் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், செப். 30 -

நாகர்கோவில் மாநகராட்சி, மாமன்ற உறுப்பினர்கள் இயல்பு கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் வைத்து 29.09.2025, திங்கட்கிழமை அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் துவக்கத்தில் கடந்த 27.09.2025 அன்று கரூரில் நடந்த துயர சம்பவத்தில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து, நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மழைநீர் வடிகால் ஓடைகளை சீரமைத்து அதன்மேல் நடைபாதை அமைக்கும் பணிகள் மற்றும் ஒவ்வொரு வார்டுகளிலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாகவும், மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாநகர பொறியாளர் சரவணன், மாநகராட்சி உதவி ஆணையர் பாலசுந்தரம், மாநகர் நல அலுவலர் மருத்துவர் ஆல்பர் மதியரசு, உதவி செயற் பொறியாளர் ரகுராமன், மண்டல தலைவர்கள் இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

‘திராவிட மாடல்’ நல்லாட்சியில்

தமிழகத்தில் ஏழைகளே இல்லை என்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டுள்ளது!

மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்த விழாவில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேச்சு!

ரிஷிவந்தியம், செப். 30 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், மணலூர்பேட்டையில் உள்ள அண்ணாமலையார் திருமண மண்டபத்தில், ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றியத்தில் இருந்து மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ரிஷிவந்தியம் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட சுத்தமலை, ஆற்கவாடி, சீர்பாதநல்லூர், திருவரங்கம், செம்படை, சீர்பணந்தல், மேலந்தல், மேட்டுச்சேரி, முருக்கம்பாடி, அத்தியந்தல், சித்தபட்டினம் ஆகிய ஊராட்சியில் இருந்து அதிமுக, பா.ஜ.க., தவெக, தே.மு.தி.க., நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட மாற்று கட்சிகளை சேர்ந்த ஆண்கள், பெண்கள் இளைஞர்கள் சுமார் 300 பேர் அந்த கட்சியில் இருந்து விலகி, எல்லோருக்கும் எல்லாம் என மக்கள் பணியாற்றும், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியினை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்த அனைவருக்கும் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ கழக இரு வண்ண வேட்டிகள், துண்டுகள் மற்றும் சேலைகள் அணிவித்து கழகப் பணியில் திறம்பட செயலாற்றிட தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் பேசுகையில் தமிழக முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் நல்லாட்சியில் தமிழகத்தில் ஏழைகளே இல்லை என்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டுள்ளது, அனைவருக்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் ஏதாவது ஒரு வகையில் சென்றடையும் வகையில் உள்ளது, அதற்கேற்ற திட்டம் தீட்டி அதற்கு நிதி ஒதுக்கி உரிய துறை அதிகாரிகள் மூலம் நலத்திட்ட உதவிகளை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் வகையில் நமது முதலமைச்சர் செயல் பட்டு வருகிறார், இதனால் நாளுக்கு நாள் நமது கழக அரசுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது, கழக அரசின் நலத்திட்ட உதவிகள் பெறாத குடும்பமே இல்லை என்ற அளவுக்கு அனைவரும் கட்சி வித்தியாசம் இன்றி வழங்கப்பட்டு வருகிறது, இதனால் பொதுமக்கள் கழகத்தில் தங்களை ஆர்வமுடன் இணைத்துக்கொண்டு வருகின்றனர், தமிழகம் முழுவதும் கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது கழக தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது போல் வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலிலும் 234 தொகுதிகளிலும் கழகத்தின் தலைமையிலான கூட்டணி வெற்றி பெறப் போகிறது, கழகம் மக்களை நம்பி தேர்தலை சந்திக்கிறது, எனவே மக்கள் ஆதரவு நமது கழகத்திற்கு இருக்கிற வரையில் தலைமை அறிவிக்கிற வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற்று சட்டமன்றம் செல்வார்கள், இதில் யாருக்கும் எந்த ஒரு சந்தேகம் வேண்டாம், ஆகவே கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தில் புதிதாக இணைந்த மாற்றுக் கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன் தீவிரமாக தேர்தல் பணி ஆற்ற வேண்டும் என்று பேசினார், நிகழ்ச்சியின் முடிவில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பாரதிதாசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜீவ் காந்தி ஆகியோர் நன்றி கூறினார்கள்.

அதேபோல் ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது, இதற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ தலைமை தாங்கினார், ஒன்றிய கழக செயலாளர்கள் பெருமாள்,ராஜவேல், ஒன்றிய குழு தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகி செந்தாமரை, கிளை கழக செயலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், நிகழ்ச்சியில் பாசார் ஊராட்சியை சேர்ந்த அதிமுக நிர்வாகி பழனி, சிலம்பரசன் ஆகியோர்கள் தங்களது ஆதரவாளர்கள் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட சுமார் 100க்கும் மேற்பட்டோர்களுடன் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்தவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கழக இரு வண்ண வேஷ்டிகள், துண்டுகள், சால்வைகள் மற்றும் சேலைகள் அணிவித்து அன்புடன் வரவேற்று ஒற்றுமையாக அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் கழக ஆட்சி அமைந்திட தேர்தல் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார், இதில் கழக நிர்வாகிகள் ராஜு, சிவமுருகன், செல்வகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில், வானூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, வாக்குச்சாவடி முகவர்கள் BLA2 , தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் எஸ்.கே.பி.கருணாநிதி, செ.புஷ்பராஜ், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், மாரிமுத்து, தயா இளந்திரையன், பிரமா குப்புசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.